கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

S. M. FERNANDO
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 20 வெள்ளிக்கிழமை (05 – 11 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 342

இனப்பிரச்சினை உண்டு அதற்கு உடன் தீர்வு தேவை

மாகாணசபை பயனற்ற அமைப்பு விஜேதுங்காவுக்கு சந்திரிகா பதிலடி

கொழும்பு, நவம்பர் 5

இந்த நாட்டில் இனப்பிரச்சினை உண்டு, அதனைத் தீர்க்க வேண்டும் என்பதே பெரும்பாலான மக்களின் விருப்பமாகும்.

அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் பெரும்பான்மையான மக்களின் அபிலாஷையாகும்.

மாகாண சபைகளினால் நாட்டு மக்களுக்கு எவ்வித பயனுமில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினாலும் நாட்டு மக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை.

—இவ்வாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு அனுப்பிய பதிலடிக் கடிதத்தில் பதிலடி கொடுத்துள்ளார் மேல்மாகாணசபையின் முதன் மந்திரி திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா.

இதேவேளை— வடக்கு கிழக்கில் நடக்கும் யுத்தத்தில் அரசாங்கம் வெல்லும் என்று எவரும் நினைக்க வேண்டாம் என்றும் அவர் சிங்கள மக்களைக் கேட்டுக் கொண்டார்.

மாகாணசபைகளின் கடமை மத்திய அரசுடன் வழக்காடுவது அல்ல என்றும்—

அரசுக்குள் இன்னோர் அரசை அமைக்கமுடியாது என்பதைத் தெரிந்துகொள்ள

(3 ஆம் பக்கம் பார்க்க)

மூர்ச்சந்தி மூரலி

இப்பவே விட்டுட்டு ஓடுகினம்! சாப்பாடும் இப்படி என்றால்.....

மாவீரர் தினம்

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 27 ஆம் திகதி சனிக்கிழமை வரை ஏழு தினங்கள் தமிழீழம் எங்கும் மாவீரர் தினம் கொண்டாடப்படும். (இ-111)

திட்ட அமுலாக்கல் அமைச்சராக அனுரா?

15 ஆம் திகதி பதவி ஏற்கலாம்

கொழும்பு, நவ. 5

சுதந்திரக்கட்சியில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் அண்மையில் சேர்ந்து கொண்ட அனுரா பண்டாரநாயக்கா திட்ட அமுலாக்கல் மற்றும் வெளிநாட்டு வர்த்தக அமைச்சராக இம்மாதம் 15 ஆம் திகதி பதவிப்பிரமாணஞ் செய்து கொள்வார்.

உயர் நிலை அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரிதாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை – இம்முறை வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது அனுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியாக பங்கெடுத்துக் கொள்வார் என்று ஐ. தே. க. பொதுச் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான சிறி சேனகூரே தெரிவித்திருக்கிறார். (இ-6)

ஆளும் கட்சியின் எம். பி. பெர்னாண்டோ ராஜினாமா!

ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியான டபிள்யு. ஜ. பெர்னாண்டோ தமது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் அவர் நேற்றுக் காலை தமது பதவி விலகல் கடிதத்தைக் கையளித்தார்.

இதனால் நாடாளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள வெற்றிடம் குறித்து தேர்தல் ஆணையாளருக்குத் தாம் உடனே அறிவித்ததாக செயலாளர் நாயகம் நிஹால் செனவிரத்னா தெரிவித்தார். (ஒ-எ)

அனுராவுக்கு இடமளிக்கவே ராஜினாமா செய்தேன்

பெர்னாண்டோ அறிவிப்பு

அனுராவுக்கு நாடாளுமன்றத்தில் இடமளிப்பதற்காக, ஜனாதிபதி விஜேதுங்காவின் கோரிக்கையை ஏற்று நான் எம். பி. பதவியை ராஜினாமாச் செய்துள்ளேன்.

திரு. டபிள்யு. ஜ. பெர்னாண்டோ 'சந்தேசய'வுக்கு அளித்த பேட்டியில் முன் கண்டவாறு கூறினார்.

'ஜனாதிபதியின் கோரிக்கை பற்றி எனது நெருங்கிய சகாவான அமைச்சர் லொக்கு பண்டாரவுடன் கலந்தாலோசித்தேன். அதன் பின்னர் எனது பதவிவிலகல் கடிதத்தை அரசமைப்பு விவகார அமைச்சர் சொக்லியிடம் நேற்று முன்தினம் இரவு கையளித்தேன்'' என்று கூறிய திரு. பெர்னாண்டோ—

நான் அரசியலில் இருந்து விலகப்போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை தொகுதி அமைப்பாளராக நான் தொடர்ந்து பணி புரிவேன்'' — என்றும் தெரிவித்தார். (ஒ-6)

அமைச்சரவையில் மாற்றம்?

கொழும்பு, நவ. 5

அனுராவுக்கு அமைச்சர் பதவி வழங்குவதற்காக அமைச்சரவையில் வெகுவிரைவில் சிறிய மாற்றம் ஒன்றை அரசு அறிவிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி பி. பி. ஸி. இதனை நேற்று தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் போது அனுரா அரசதரப்பு எம். பியாக இருப்பார் என்றும் — அனுராவைக் கொண்டே அவரது தாயாரின் தலைமையில் உள்ள சுதந்திரக் கட்சி மீது நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்ட அரசு தயாராகி வருவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை — தமது நாடாளுமன்ற அரசியல் வாழ்வில் இப்போதுதான் முதல் தடவையாக அனுரா அரசதரப்பு எம். பியாக பணியாற்ற உள்ளார் என்று பி. பி. ஸி. செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ கூறினார்] (ஒ-எ-6)

தரம் குறைந்த உணவு குறித்து படையினர் முறைப்பாடு!

சிலர் உண்பதற்கு மறுப்பு

கொழும்பு, நவ. 5

வடக்கு – கிழக்கு யுத்த களத்தில் வைத்து இராணுவத் தினருக்கு வழங்கப்படும் உணவு வகைகள் மனித பாவனைக்கு உகந்தவை அல்ல என்று இராணுவத் தலைமைப் பீடத்துக்கு முறையிடப்பட்டிருக்கிறது.

விசேட இராணுவப் படைத் தளபதி பிரிகேடியர் சானக பெரேரா இம்முறைப்பாட்டை எழுத்து மூலம் தலைமைப் பீடத்துக்கு சமர்ப்பித்திருக்கிறார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

போர் முனைகளில் இதுவரை படையினருக்கு வழங்கப்பட்ட உணவுப் பைக்கெட்டுக்களில் சுமார் ஒரு லட்சம் பைக்கெட்டுக்கள் அழுகிப் பழுதடைந்திருந்தன என்றும் —

பழுதடைந்திருந்த உணவுப் பைக்கெட்டுக்களில் ஒரு பகுதி புதிதாக இராணுவத்தில் சேர்ந்த சிப்பாய்களுக்கு அனுப்பப்பட்டன என்றும் —

அவர்களும் அவ்வுணவை ஏற்க மறுத்து விட்டனர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-6)

வங்காலை கிராமம் செல்ல பொலீஸின் அனுமதி தேவை

மன்னார் பெருநிலப் பரப்பில் உள்ள வங்காலைக் கிராமத்துக்கு மக்கள் செல்ல வேண்டுமானால் அனுமதிப் பத்திரம் பெற்றே செல்ல வேண்டும் என்று ஸ்ரீலங்காப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

மன்னார் நகரில் இருந்து 5 மைல் தொலைவில் வங்காலை உள்ளது. அங்கு அக்கிராமவாசிகள் தவிர்ந்த வேறு யாராவது செல்ல வேண்டுமானால் பொலீஸ் அதிகாரிகளிடமிருந்து அனுமதியைப் பெற்ற பின்னரே செல்ல வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — பேசாலை நகரின் பிரதான வீதியில் செல்லபாதசாரிகளோ அல்லது சைக்கிள்களில் செல்வோரோ

(3 ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சி கிழக்கிலிருந்து விறகு பெற முயற்சி

வடமராட்சிகிழக்கில் உள்ள செம்பியன் பற்று, நாகர் கோவில் பகுதிகளில் உள்ள 25 ஏக்கர் காட்டு நிலத்தில் இருந்து விறகுக்காக மரங்கள் பெறப்பட உள்ளன.

யாழ். வன பரிபாலனத் திணைக்களத்துக்குச் சொந்தமான இக்காட்டுப் பகுதிகளில் இருந்து பெறும் மரங்கள் மூலம் குடாநாட்டின் மூன்று மாதகால விறகுத் தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹஸ்ரத்பால் மத்தியஸ்தர் படுகாயம்

ஸ்ரீநகர், நவ. 5

ஸ்ரீநகரில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் ஜம்மு காஷ்மீர் மாநில ஆளுநரின் ஆலோசகர் லெப்டினன்ட் ஜெனரல் எம். ஏ. ஷாகியும் ஹஸ்ரத்பால் மசூதிப் பிரச்சினையில் மத்தியஸ்தம் வகித்து வரும் டரஸகத் ஹபிவுல்லாவும் காயம் அடைந்தனர்.

ஹபிவுல்லாவின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உளவு குற்றச்சாட்டு

தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் மாநில அரசு உளவு நடவடிக்கையில் சிலரை ஈடுபடுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது என்றும் —

அதனைத் தொடர்ந்து ஆளுநர் தமது மெய்க்காப்பாளர் ஒருவர் உட்பட மாளிகை ஊழியர் சிலர் மீது நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் இத்தகவலை நேற்று செய்தியாளர்களிடம் வெளியிட்டார்.

கொழும்பு செல்லும் வழியில் ரயில்களில் வைத்து கைது!

ராகாவில் ஞாயிறன்று 35 பேர் பிடிபட்டனர்

கொழும்பு, நவ. 5

வடக்கில் இருந்து கொழும்புக்கு ரயிலில் செல்லும் இளைஞர்கள், யுவதிகள் ரயில் தரிப்பு நிலையங்களில் வைத்து கைது செய்யப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ராகம ரயில் நிலையத்தில் இளம் பெண்கள் உட்பட 35 க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரயில் நிலையங்களில் ரயில் நிற்கும் சமயம் பொலீஸார் தமிழர்களை இனங்கண்டு – அவர்களில் குறிப்பாக இளைஞர்களையும், இளம் பெண்களையும் கைது செய்து வருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரயில் நிலைய சோதனையின் போது பொலீஸாருக்கு உதவியாக சிவில் உடை தரித்த தமிழ் பேசும் குழு ஒன்று செயற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இருந்து புறப்பட்டுச் சென்ற ரயில் ராகமவில் தரித்து நின்ற சமயம், ரயிலினுள் பிரவேசித்த பொலீஸாரும் சிவில் உடை தரித்த குழுவினரும் அடையாள அட்டைகளை பரிசோதித்து, இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்களையும், சுமார் 15 இளம் பெண்களையும் கைது செய்து கொண்டு சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ரயில் நிலையங்களில் தமிழர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் கடந்த சில தினங்களாக அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகிறது. (ஒ)

பிரிட்டிஷ் அரசு வழங்கிய வைத்திய உபகரண தொகுதி குமண கப்பலில் வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 5

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'குமண' கப்பலில் யாழ். ஆஸ்பத்திரிக்கு பிரிட்டிஷ் அரசு வழங்கிய வைத்திய உபகரணங்களில் ஒரு தொகுதியும் எடுத்துவரப்படுகின்றது.

இக்கப்பலில் உணவுப் பொருள்களோ. தபால் பொதிகளோ எடுத்து வரப்படவில்லை எனவும் —

யாழ். ஆஸ்பத்திரிக்குரிய 4 ஆம் கந்தாயத்துக்கான மருந்து வகைகள் எடுத்துவரப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது,

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான நிவாரணப் பொருள்களும், அடுத்த மாதம் ஆரம்பமாக விருக்கும் ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கான காகிதாதிகளும் இக்கப்பலில் வருகின்றன. (ஒ-17-)

வீரச்சாவு

யாழ்ப்பாணம், நவ. 5

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 25 ஆம் திகதி போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

ஆற்றை கடக்க முயன்ற சமயம் இப்போராளி முதலையிடம் சிக்கிக்கொண்டார். வீரவேங்கை தமிழ்வேந்தன் அல்லது ரவீந்திரகுமார் (மாணிக்கம் ரவிச்சந்திரன் — மன்னம்பிட்டி) என்பவரே வீரச்சாவு அடைந்தவர் ஆவார். (ஒ)

★ ★ ★

மட்டக்களப்பு ஆலங்குளத்தில் கடந்த 30 ஆம் திகதி இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் புலிகளின் முழுநேர ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

4 பிள்ளைகளின் தந்தையான ஜெயவைமுத்து ஜனமோகன் (மாங்கேணி) என்பவரே இராணுவத்தினரின் குண்டுக்குப் பலியானவர் ஆவார். (ஒ-3)

அனுமதி முறையை ஆட்சேபித்து கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 5

இம்முறை பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்குமுகமாக, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்கள் பெற வேண்டிய புள்ளிகளை அதிகரிப்பது என்று அரசு செய்துள்ள முடிவை ஆட்சேபித்து கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினார்கள். (இ-6)

செயலகத்தில் எழுதுவினைஞர் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 5

நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு அழைக்கப்பட்ட எழுதுவினைஞர்கள் இணைந்த சேவையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளையும், நாளை மறுதினமும் யாழ். செயலக மேலதிக அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறவிருக்கின்றன.

பொது எழுதுவினைஞர்களுக்கு நாளையும் —

தபால், அச்சக, நீதிச் சேவை, ரயில்வே, ஆஸ்பத்திரி எழுதுவினைஞர்களுக்கும், கணக்குபதிவாளர், சிறைப்பர், ரயில் நிலைய அதிபர், களஞ்சியப் பொறுப்பாளர், ஆங்கில — தமிழ் தட்டெழுத்தாளர் ஆகியோருக்கு நாளை மறுதினமும் — காலை 9 மணி முதல் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் கேட்கப்பட்ட ஆவணங்களின் இரு போட்டோ பிரதிகளைச் சமர்பிக்க வேண்டும் என்று அரச அதிபர் கேட்டுள்ளார்.

பெரும் போரை எதிர்கொள்ள புலிகள் தயாராகின்றனர்

கொழும்பு, நவ. 5

வடக்கு – கிழக்கில் இனப்பிரச்சினை இல்லை என்றும், பயங்கரவாதப் பிரச்சினை தான் உள்ளது என்றும் ஜனாதிபதி விஜேதுங்கா எடுத்த நிலைப்பாட்டை அடுத்து—

ஆயுதப் படையினர் நடத்தக்கூடிய பெரிய அளவிலான போரை எதிர்கொள்வதற்கு விடுதலைப் புலிகள் தயாராகி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து [illegible] வைத்து வெரிதாஸ் வானொலி இவ்வாறு தெரிவித்தது.

ரொய்ட்டர், அமெரிக்கன் அசோசியேட்டட் பிறெஸ் மற்றும் சில வெளிநாட்டுச் செய்தி ஏஜன்சிகளைச் சேர்ந்த செய்தியாளர்கள் குழு ஒன்று கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தது தெரிந்ததே.

வெரிதாஸ் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

விடுதலைப் புலிகள் அரசுடனும் ஆயுதப்படைகளுடனும் சாகும் வரையிலான போருக்கு தயாராகி வருகின்றார்கள்—

வடக்கு – கிழக்கில் இனப்பிரச்சினை இல்லை என்றும்— பயங்கரவாதப் பிரச்சினை தான் அங்கு உள்ளது என்றும் ஜனாதிபதி விஜேதுங்கா எடுத்துள்ள நிலைப்பாட்டை அடுத்து—

விடுதலைப் புலிகள் இந்த முடிவை எடுக்கவேண்டியவர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

குண்டுபட்டு குடல் சிதறி
உன்பிள்ளை வீதியில் கிடக்கிறாள்
குருதிச் சேற்றில் உன் நிலம் கிடக்கிறது
அடுப்பெரிக்க விறகுதேடும் தமிழனே
வாடா எதிரியை எரிப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIAT LUX

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வளர்ச்சிக்கு உழைத்த அதிபர்

திரு. பொன்னையா பாலசிங்கம் அவர்களின்

பிரிவுபசார சிறப்புமலர் (05 - 11 - 1993)

கல்லூரியின் மீட்சிக்கு அயராது உழைத்த அதிபர் ஏறு

ஹாட்லிக் கல்லூரியின் 150 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்ட வரலாற்றில், நெருக்கடிகள் மிகுந்த காலப்பகுதியில் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்களின் வரிசையில் 13ஆவது அதிபராக திறம்பட சேவையாற்றி, பலரினதும் பெருமதிப்பைப்பெற்ற திரு. பொன்னையா பாலசிங்கம் அவர்கள் 18–10–93 அன்று ஓய்வு பெற்றுள்ளார்.

கல்லூரியின் சிறந்த ஒரு பழைய மாணவராகிய திரு. பாலசிங்கம் தனது 37 ஆண்டுக்கால ஆசிரிய சேவையில் 24 ஆண்டுகளை இக்கல்லூரிக்கே அர்ப்பணித்தார். ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும், உபஅதிபராகவும், அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் இக்கல்லூரியில் கடமையாற்றினார்.

1838ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட ஹாட்லிக் கல்லூரி இன்று இலங்கையின் கல்வி மண்டல வானில் ஒளி மிளிரும் தாரகைகளில் ஒன்றாக மின்னுகிறது. இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும் வெற்றிக்குமான இரகசியம் இக்கல்லூரியைத் தாபித்தவரினதும், அவரைத் தொடர்ந்து அதிபர்களாக இருந்தவர்களினதும், திறமைமிக்க ஆசிரியர்களினதும் கடமையுணர்வுள்ள சேவையும், மாணவர்களின் திறமையும் கல்வியில் அவர்களுக்குள்ள அயராத ஈடுபாடுமாகும்.

கல்லூரிக்கு ஏற்பட்ட சோதனைகள்

பல இடர்களுக்கு மத்தியிலும் உறுதி தளராது வளர்ந்து வந்த கல்லூரியின் நூலகம் 1984ஆம் ஆண்டு செப்டெம்பர் 1ஆம் திகதி எரிக்கப்பட்டது. கல்லூரியிலும் அதன் சுற்றாடலிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. 150 ஆண்டு கால வரலாற்றில், கல்லூரி தனது புனிதமான வளாகத்தில் இருந்து இடம்பெயரவேண்டிய நிர்ப்பந்தம் முதன் முதலாக ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில் பதவி ஏற்ற திரு. பொ. பாலசிங்கம் அவர்களின் ஆளுமைக்கு இது ஒரு சவாலாக அமைந்தது. கல்லூரி விடுதிச்சாலையில் சில வாரங்களும் மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் சில வாரங்களும் நடைபெற்றபின், 6-2-85 தொடக்கம் புற்றளை மகாவித்தியாலயத்தில் பாடசாலை ஒழுங்காக நடைபெறத் தொடங்கியது. அப்பாடசாலையின் பாவிக்கப்படாத கட்டடங்கள் போதாத நிலையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளினதும், கோயில் நிர்வாகிகளினதும் அனுமதியுடன் கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடங்களும், கோயில் மடங்களும் வகுப்பறைகளாகப் பயன்படுத்தப்பட்டன. அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் கொட்டகைகள் அமைக்கப்பட்டன.

யாழ். இந்து மாணவர் தலைமையில் யாழ். மாணவர் குழு சேகரித்து வழங்கிய நூல்கள் ஒரு தனிநபர் வீட்டிலும் பின்னர் விசேடமாக இதற்கென பத்தாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடத்திலும் பேணிப் பாதுகாக்கப்பட்டன. புற்றளை ம. வி. இற்குச் சொந்தமான விளையாட்டு மைதானம் திருத்தப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. உயர்தர மாணவர்களுக்கான விஞ்ஞான பாடச் செய்முறைகள் சிறிது காலம் வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் பின் புற்றளை மகாவித்தியாலயத்திலும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டன.

1987இல் வடமராட்சி லிப்ரேஷன் ஒப்ரேஷனின்போது பல மாணவர்களைக் கைது செய்து பூசா முகாமுக்கு கப்பலேற்ற முற்பட்டபோது சாதுரியமாக உயர் இராணுவ அதிகாரிகளுடன் வாதாடி தடுத்து நிறுத்திய பெருமை அதிபர் அவர்களையே சாரும். இதேபோன்று இந்திய அமைதிகாக்கும் படை ஆசிரியர்களைக் கைது செய்த போது அவர்களை மீட்ட நன்றியை கல்வி உலகம் என்றும் மறக்காது.

புனரமைப்பு வேலை

அதிபர் அபாயகர சூழ்நிலையிலும் அசாத்தியத் துணிவுடன் எதிர்ப்புக்களையும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

பொன்னையா பாலசிங்கம்

கல்வி வளர்ச்சிக்கு உதவிய அதிபர்

தமிழினத்தின் சோதனைகள் நிறைந்த காலப் பகுதியில் கல்வி உலகில் செயற்கரிய பணியாற்றி ஓய்வுபெற்ற ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களைப் பாராட்டுவதில் பெருமையடைகிறேன்.

இடம்பெயர்ந்து புற்றளையில் இயங்கிய போதும், அழிக்கப்பட்ட நிலையில் பழைய இடத்துக்கு மீண்டபோதும் மாணவர்களின் கல்விசார், கல்விசாரா நிகழ்ச்சிகள் தங்குதடையின்றித் தொடர அவர் ஆற்றிய பணிகள் பல.

உள்ளக கற்றல் கற்பித்தல் மேற்பார்வையினை திறம்பட செய்தும், ஆசிரியர்கட்கு நல்வழி காட்டியும், இதர நிறுவனங்களின் நல்லெண்ணத்தைப் பெற்றும், ப. மா. ச, பா. அ. சங்கங்களுடன் பலமான நல்லுறவை மேற்கொண்டும் கல்வி வளர்ச்சிக்கு அவர் உதவிய பாங்கு போற்றுதற்குரியது. இதனால் ஹாட்லிக் கல்லூரி பண்டைய தன் பெருமை சிறிதும் குன்றாது மேன்மேலும் சாதனைகளைப் படைக்கிறது.

- இரா. சுந்தரலிங்கம்,
கல்விப்பணிப்பாளர்,
யாழ். மாவட்டம்.

கல்லூரியை முன்னேற்றிய அதிபர்

திரு. பொ. பாலசிங்கம் அவர்கள் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவன். பேராதனைப் பல்கலைக்கழக விசேட பட்டதாரியான இவர் முதன் முதலாக பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

1968 இல் ஹாட்லிக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்து தன் பணியைச் சிறப்புறச் செய்தார். 1985 ஆம் ஆண்டு அதிபராகவும் கொத்தணி அதிபராகவும் பதவி உயர்வு பெற்று தனது கடமைகளை திறமையாகச் செய்தார்.

இவர் அதிபராக பதவி ஏற்றபோது கல்லூரி பாதிக்கப்பட்டிருந்தது. தனது விடா முயற்சியாலும், திறமையாலும் கல்லூரி முன்னைய நிலையை அடைவதற்கு உழைத்து வெற்றி கண்டார்.

ச. செல்லத்துரை,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
பருத்தித்துறைக் கோட்டம்.

தன்னலமற்ற சேவை

அதிபர் திரு. பொ. பாலசிங்கம் கல்லூரியை மீட்டெடுப்பதில் காட்டிய உத்வேகமும், உற்சாகமும், பழைய மாணவர் சங்கம் போன்ற அமைப்புக்களை மேன்மேலும் கல்லூரி அபிவிருத்தியில் அக்கறை கொள்ளச் செய்தன.

வெளிநாடுகளில் உள்ள கிளைகளும் 'கல்லூரி அபிவிருத்தி நிதியம்' ஒன்றை ஆரம்பித்து பொருத்தமான 'செயற் திட்டங்கள்' மூலம் கல்லூரிக்கு உதவ முன் வந்துள்ளமை அதிபரின் தன்னலமற்ற சேவையின் விளைவேயாகும்.

டி. ஆர். அருமைநாயகம்,
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்.
(தாய்ச் சங்கம்)

சாதனை படைத்தவர்

திரு. பாலசிங்கம் அதிபராகவிருந்த 8 ஆண்டுகளும் ஒரு சோதனை மிகுந்த காலமாகும்.

இந்த இருண்ட காலத்திலும் ஹாட்லிக் கல்லூரி கல்வித்துறையிலும் மற்றைய கல்விசாரா துறையிலும் பின்னடையாமல் சிறப்பாக இயங்கி வந்தது.

24 வருடங்கள் தன்னை எமது கல்லூரியுடன் இணைத்துக்கொண்ட திரு. பாலசிங்கத்தின் சேவை தொடர்ந்து ஹாட்லிக் கல்லூரிக்கும் தமிழ் இனத்திற்கும் கிடைக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

பேராசிரியர் அ. துரைராசா,
யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர்
தலைவர்,
ஹாட்லி பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளை.

கொத்தணி தந்த கோமகன்

எமது பருத்தித்துறைக் கொத்தணியில் பதினான்கு பாடசாலைகள் உள்ளடங்கியிருக்கின்றன. இவற்றில் வடமராட்சியில் புகழ்பரப்பும் பாடசாலைகளும் அடங்கியிருக்கின்றன. இவற்றின் முதன்மைப் பாடசாலையே பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதன் அதிபர் எமது கொத்தணியின் அதிபராக நியமனம் பெற்றது எமது அதிர்ஷ்டம் அவர் 11 ஆம் ஆண்டு வரையிலுள்ள எமது பாடசாலைகளில், 11 ஆம் ஆண்டு சித்தியடைந்த மாணவர்களைத் தனது கல்லூரியிலும், மாணவிகளை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலும் மேற்படிப்பைத் தொடர அனுமதி வழங்கி மாணவரின் நலன்களைக் காத்த ஒரு பெருந்தகை.

செ. செல்வராசா,
செயலர் பருத்தித்துறைக் கொத்தணி.

ஆலயப் பணிபுரிந்த அதிபர்

புலோலி பகுபதீஸ்வரர் தேவஸ்தானத்தின் கோபுர அமைப்பு, தேவஸ்தான குருவாசம் என்பவற்றை அமைப்பதில் முன்னின்று உழைத்தவர் எமது பெருமதிப்புக்குரிய அதிபர் பாலசிங்கம் ஆவார்.

அன்னார் சீரும், சிறப்பும், சிவனின் திருவருட்பார்வையும் பெற ஆசீர்வதிப்பதில் பெருமை அடைகின்றோம்.

தி. நாகராசா,
அறங்காவலர்,
புலோலி பகுபதீஸ்வரர் தேவஸ்தானம்.

மறுசீரமைத்தவர்

1987 ஆம் ஆண்டு இராணுவ அட்டூழியங்களினால் சீரழிந்த எமது சங்கத்தை அதன் தலைவராகத் துணிந்து பொறுப்பேற்று மறுசீரமைத்து இயங்கவைத்த பெருமை இளைப்பாறிச் செல்லும் ஹாட்லிக் கல்லூரியின் அதிபர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களையே சாரும். அவரை நீடூழி வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறோம்.

அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
புலோலி பகுபதீஸ்வரர் கூட்டுறவுச் சங்கம்
விளம்பர இல. (27889)

வாழ்த்துவோர்

- குமார் அச்சகம், பருத்தித்துறை
- குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை
- ஐக்கிய விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை
- விநாயகர் தரும நிதியம், பருத்தித்துறை
- சதாவதானி சதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், தம்பகெட்டி, பருத்தித்துறை.
- புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி

பிரிவுபசாரம்

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஓய்வுபெறும் அதிபர் திரு. பொ. பாலசிங்கம் அவர்களுக்கு நாளை 6ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரியில் பிரிவுபசாரம் ஒன்றை நடத்தும்.

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள நஷனல் பனசோனிக் ஜப்பான் கெசற் றேடியோ (மொடல் 5310) Four Band விற்பனைக்குண்டு தொடர்பு: சி. நாதன் இல. 16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (27895)

தவறிவிட்டது

கு. ரத்தினம் ஆகிய நான் சுன்னாகம் மக்கள் வங்கி முன்னால் சிலருடன் உரையாடிக் கொண்டிருந்த போது இல. 250731060X தேசிய அடையாள அட்டை அடங்கிய கவர் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஜெமினி ஸ்ரோர்ஸ், கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (6713)

ஏவர்விஷன்

எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்து அதிக காலமாக எடுக்காத T.V., டெக் என்பவற்றை உடன் திரும்பப் பெற்றுக் கொள்ளவும். (சி-6525)

றோணியோ பிரதி

குறித்த தவணையில் தரமான முறையில் றோணியோ செய்து கொள்ளலாம். 100 பிரதிக்கு 30/– மட்டும். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கு அருகில்) (சி-6526)

இந்தியா ருடே

இந்தியா ருடே ஆண்டுமலர் 93–94 சொற்பிரதிகள் கைவசம், தீபாவளி வாழ்த்து மடல்கள் மொத்த விற்பனையாளர் மக்மிலன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, 165, பவர் கவுஸ் றோட், யாழ்ப்பாணம். (சி-6523)

வர்த்தகமும் கணக்கியலும்

ஆண்டு 9, கனிஷ்ட தொழில்நுட்ப பரீட்சைக்குரியதும் 10ஆம், 11ஆம், ஆண்டு 6 மாணவர்களுக்குரியதுமான வர்த்தகமும் கணக்கியலும் வினா–விடை வெளிவந்துவிட்டது. ஆக்கம்: என். ராஜன் B.Com. (சி-6450)

வினாத்தாள் (ஆண்டு 3, 4)

07-11-93 ஞாயிறு வெளியிடவிருந்த ஆண்டு 3, ஆண்டு 4 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 06-11-93 சனி வெளியிடப்படும். 06-11-93 சனி பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், இல: 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27870)

ஒடுகள் தேவை

ஒடுகள் தேவை. விநியோகிக்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஆறுமுகம் ராஜ்குமார், செயலாளர், மனோன்மணி சன சமூக நிலையம், நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில். (27897)

இலவச திருமண சேவை

30 வயது, பூரட்டாதி, செவ்வாய் 12, பிரான்ஸிலுள்ள மணமகனுக்கு ஏற்ற மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். மணமக்களுக்கான தொடர்பு: ஞாயிறு காலையில் து. விமலா, இலவச திருமண சேவை யாழ். நாச்சிமார் கோவிலடி. (27859)

ரிதி ஒதுக்கீடு

1994ஆம் ஆண்டிற்கான பிரதேச அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வலி–வடக்கு பிரதேச செயலகத்திற்கு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு பிரதேச திட்டமிடற் குழுவின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதாக வலி–வடக்கு பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் தெரிவித்தார். (த-45)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 95

வர்த்தகம் தேவை

ஆரம்பம்: 06-11-1993
காலை 9.00 மணி
[சி-6520]

முக்கிய அறிவித்தல்

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

விசேட பொதுக் கூட்டம் 06-11-93

மேற்படி விசேட பொதுக் கூட்டம் (06-11-93) காலை 9-30 மணிக்கு சங்கத்தின் ஒன்பதாவது கிளை (கல்லாரை, மல்லாகம்) மண்டபத்தில் ஆரம்பமாகும். இதற்கான நிகழ்ச்சி நிரல்கள் பொதுச் சபை பிரதிநிதிகளுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளமையால் அனைத்து பொதுச்சபை பிரதிநிதிகளையும் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தரும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வே. தர்மராஜா.
செயலாளர்.
(சி/6317)

அதிக சந்தர்ப்பம்!

தீபாவளி மலிவு விற்பனை

நவம்பர் 1 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை

சகலவிதமான கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள் முதலியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அல்டி

269/1, மின்சார நிலைய வீதி, மானிப்பாய். (சி-6513)

சிவமயம்

ஸ்ரீகாஞ்சி முனிவர் நூற்றாண்டு விழா

இடம்: நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் கோவில்

06 - 11 - 1993 சனிக்கிழமை காலை 8மணி முதல் சமய கிரியைகள் யாவும் வித்தியாசாகரம் கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமையில் நடைபெறும்.

மாலை 3மணி முதல் சிவப்பிரம்மஸ்ரீ கா. சாம்ப சதாசிவக் குருக்கள் தலைமையில் விழா நடைபெறும்.

சா. சோமதேவசர்மா,
விழா அமைப்பாளர்கள்.
நீர்வேலி,
04-11-1993 [27899]

யா. சேர். வை. து. மத்திய மகா வித்தியாலயம்
வேலணை

பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்-1993

இடம்: மேற்படி பாடசாலை, 70/20, அரசடி வீதி, யாழ்ப்பாணம்
காலம்: 06 - 11 - 1993 சனிக்கிழமை காலை 9மணி

பழைய மாணவர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

தவிர்க்கப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்.

சு. கலாதரன், தலைவர்.
கா. பாலகிருஷ்ணன், செயலர்.
[27893]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

டி.பியின் சீற்றம்!

நாட்டில் ஓர் அரசாங்கமே இருக்க முடியும். அரசாங்கத்துக்குள் பல அரசாங்கங்கள் இருக்க முடியாது. மத்திய அரசாங்கமும் நாடாளுமன்றமும் வகுக்கும் தேசியக் கொள்கைகளையே மாகாண சபைகள் அமுல் செய்ய வேண்டும். மத்திய அரசுக்கு நீதிமன்றத்தில் சவால் விடுவது மாகாண சபைகளின் அலுவல் அல்ல.

இவ்வாறு மாகாண சபைகள் மீது காரசாரமாகச் சீறி விழுந்திருப்பவர் சர்வவல்லமையும் படைத்த நிறைவேற்று ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா!

அவரது மேற்படி கூற்றின் ஒவ்வொரு வசனமும், ஒவ்வொரு சொல்லும் அவரது அதிகாரத் திமிரையும், சகல அதிகாரமும் தன்னிடமே இருக்க வேண்டும் என்ற அவரது கர்வத்தையும் பிரதிபலிக்கிறது. மத்திய அரசாங்கத்தையும்— நாடாளுமன்றத்தையும்— தன்னையும் விட வேறு எவரிடமும் அதிகாரம் போய்விடக் கூடாது என்பது அவரது அக்கறை என்பதும் இலகுவில் புலனாகிறது.

அவற்றுக்கும் மேலாக மாகாணசபையும் ஓர் உள்ளூராட்சி சபையே என்ற உண்மையை அவர் தாமாகவே வெளியிட்டிருக்கிறார்.

தமிழர்களின் அரசியல் அபிலாசையை மாகாணசபைத் திட்டம் நிறைவேற்றமாட்டாது. அதுவும் மத்திய அரசின் செயற்பாட்டுப் பிரிவாகவே இயங்கும். கிராம சபைகளுக்கு இருந்த அதிகாரம் கூட அதற்கு இல்லை என்று தமிழர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அப்போது தரகராக வந்த இந்தியா மறுத்தது.

ஆறு வருடங்களுக்குப் பின்னர், ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியே மாகாணசபை வெறும் உள்ளூராட்சி அமைப்புத்தான் என்று கூறியிருக்கிறார். இந்த மாகாணசபையைத்தான் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குரிய தீர்வாகவும் அவர் கொண்டிருக்கிறார். அதிகாரப் பரவல் வடிவம் மாகாண சபைக்குச் சற்றும் மேலே சென்றுவிடக் கூடாது என்பதிலும் விஜேதுங்காவும் அவரது அரசினரும் வெகு அக்கறையாக இருக்கின்றனர்.

மாகாண சபை சிங்களவர்கள் கேட்காமலே கிடைத்த ஒன்று. அந்த அமைப்பு அமுலுக்கு வந்ததில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சியே ஏழு மாகாண சபைகளிலும் நிர்வாகத்தை நடத்தியது. எல்லோரும் ஒரே குடும்பத்தினர் என்ற முறையில் மாகாண சபையின் பலவீனங்கள் வெளியே வெளிப்படுத்தப்படவில்லை.

இப்போது மூன்று மாகாணங்களில் எதிரணியினர் நிர்வாகத்தைப் பிடித்ததும் மாகாணசபையின் பலவீனங்கள், அது வெறும் முருக்கம் செத்தல் என்ற உண்மை வெளியே வரத்தொடங்கி இருக்கிறது. மத்திய அரசுக்கும் மாகாணசபைகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலைமை முற்றி வரும்போது மாகாணசபைகள் தேவையில்லை என்ற ஒரு நிலைப்பாடு உருவாகும். அதனையே விஜேதுங்காவும் விரும்புகிறார். இந்தியாவைச் சமாளிப்பதற்காக உருவாக்கப்பட்ட மாகாணசபைகளை ஒழித்துவிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கிறது எனலாம்.

தமிழர்களை ஏமாற்றுவதற்கென உருவாக்கப்பட்ட மாகாணசபை, இப்போது மத்திய அரசுக்குப் பெரிய தொந்தரவாகி விட்டது. அதிகாரம் கேட்டுப் போட்டிக்கு நிற்கிறது. இந்த நிலையை நீக்குவதற்கு மாகாண சபை முறையை ஒழித்து விடுவதே மேல் என்று ஜனாதிபதி உத்தேசித்திருக்கலாம்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழர்களைத் தீர்த்துக்கட்ட வேண்டும் என்று எண்ணுபவரின், செயற்படுபவரின் மூளை வேறு எவ்வாறு சிந்திக்கும்? அந்தச் சிந்தனையே சீற்றமாக வெளி வந்திருக்கிறதோ?

இந்திய அரசியல்;

ராவுக்கு சவால் விடும் சட்டசபைத் தேர்தல்கள்

புதுடில்லி பிரதேசத்தில் நாளை வாக்களிப்பு

புதுடில்லி, நவ. 5

பிரதமர் பி. வி. நரசிம்மராவின் தலைமைக்குச் சவாலாக அமையும் என்று கருதப்படும் வட இந்தியாவைச் சேர்ந்த நான்கு மாநிலங்களின் சட்டசபைகளுக்கும் புதுடில்லி யூனியன் பிரதேச சட்டசபைக்குமான தேர்தல்கள் இம்மாதம் நடைபெறவுள்ளன.

இவ்வரிசையில் புதுடில்லி யூனியன் பிரதேச சட்டசபைக்கான தேர்தல் நாளை சனிக்கிழமை நடைபெறுகின்றது.

உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல்கள் இம்மாதம் வெவ்வேறு திகதிகளில் நடைபெறவுள்ளன.

புதிதாக அமைக்கப்பட்ட புதுடில்லி சட்டசபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 70 ஆகும். மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 57 லட்சமாகும். இவர்களில் 27 லட்சம் பேர் 41 தொகுதிகளில் உள்ளனர். 20 முதல் 25 தொகுதிகளில் வெற்றிவாய்ப்பைத் தீர்மானிக்கக் கூடிய நிலையில் ஸிக்கியர்கள் உள்ளனர்.

இந்திரா காங்கிரஸ் சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர் எச்.கே.எல். பகத்தும் —

பாரதிய ஜனதா சார்பில் ஓ. பி கோஹ்லியும் முதலமைச்சர் பதவியை மனதில் வைத்துக் கொண்டு தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் பிரதமர் வி.பி. சிங் தலைமையிலான ஜனதா தளமும் இத்தேர்தலில் போட்டியிடுகிறது.

68 உறுப்பினர்களைக் கொண்ட இமாசலப் பிரதேச சட்டசபைக்கு இம்மாதம் 9 ஆம் திகதியும் —

₹20 உறுப்பினர்களைக் கொண்ட ராஜஸ்தான் சட்டசபைக்கு இம்மாதம் 11ஆம் திகதியும் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. (த-எ)

நரிபுர் கலைகள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 5

குரும்பசிட்டி சன்மார்க்க சபை மணிவிழா நிகழ்ச்சித் தொடர் 2 இல் தமிழர் கலைகள் பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமை 8.30 மணி முதல் மாலை 3 மணி வரையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 1 மணி வரையும் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் நடைபெறும். கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கின் அங்குரார்ப்பண உரையை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை நிகழ்த்துவார். (க)

16 வருடங்களின் பின் நாடு திரும்பிய பெனாஸிரின் சகோதரர் விமானநிலையத்தில் கைது!

இஸ்லாமபாத், நவ. 5

பதினாறு வருடகால அஞ்ஞாதவாசத்தின் பின்னர் பாகிஸ்தான் திரும்பிய பிரதமர் பெனாஸிரின் சகோதரரான மிர்முர்தாஸா இஸ்லாமபாத் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு சிந்து மாநில சிறை ஒன்றில் காவலில் வைக்கப்பட்டார்.

முர்தாஸாவைக் கைது செய்த பொலீஸார், அவரை வரவேற்க விமான நிலையத்தில் காத்துநின்ற அவரின் தாயார் நுஸ்ரத்பூட்டோவுடன் பேச அவரை சில நிமிடங்கள் அனுமதித்தனர்.

பொராளிக்குழு ஒன்றுடன் தொடர்பு கொண்டிருந்தது, பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டது போன்ற குற்றச்செயல்களுக்காக முர்தாஸா பாகிஸ்தானில் தேடப்பட்டு வந்தார்.

முர்தாஸா விமான நிலையத்தை வந்தடைவதற்கு முன்னர் அவரை வரவேற்க விமான நிலையத்தில் திரண்டிருந்த அவரது ஆதரவாளர்களைக் கலைக்க பொலீஸார் கண்ணீர்க்குண்டுப் பிரயோகம் நடத்தினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் 24 தொகுதிகளில் போட்டியிட்ட முர்தாஸா, சிந்து சட்டசபைக்கான தேர்தலில் ஒரு தொகுதியில் மட்டும் வெற்றிபெற்றார். (த-எ)

315 பயணிகளுடன் கடலில் மூழ்கிய விமானம்

ஹொங்கொங், நவ. 5

தாய்வான் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான ஜம்போ ஜெட் பயணிகள் விமானம் ஒன்று 315 பேருடன் ஹொங்கொங் துறைமுகத்தினுள் மூழ்கியது.

நேற்றுக் காலை அந்த விமானம் ஹொங்கொங் விமான நிலைய ஓடுபாதையில் வந்திறங்கியபோது காலநிலை மோசமானதாக இருந்தது. அதனால் அவ்விமானம் ஓடு பாதையையும் தாண்டிச் சென்று அருகில் இருக்கும் கடலினுள் மூழ்கியது. வால் பக்கம் மட்டுமே நீருக்கு மேல் தெரிந்தது. மீட்பு நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. அனைவரும் காப்பாற்றப்பட்டனர். 13 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் மட்டுமே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஹொங்கொங் விமான நிலையம், உலகில் மிக நெரிசலான விமானப் போக்குவரத்தைக் கொண்டது என வர்ணிக்கப்படுகிறது. (த-எ)

ஜேர்மனியில் கட்டாய 'எய்ட்ஸ்' பரிசோதனை

பெர்லின், நவ. 5

ஜேர்மனியில் கடந்த பதினொரு ஆண்டுகளில் சத்திரசிகிச்சை செய்து கொண்டவர்களும் புதிய இரத்தம் ஏற்றிக்கொண்டவர்களும் உடனடியாக எய்ட்ஸ் பரிசோதனைக்கு தங்களை உட்படுத்திக் கொள்ளும்படி அந்த நாட்டு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதனால் 10 லட்சத்துக்கு அதிகமானோர் மீது எய்ட்ஸ் பரிசோதனை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரத்தத்தைச் சேகரித்து விநியோகம் செய்து வரும் நிறுவனம் ஒன்று, எய்ட்ஸ் பரிசோதனை செய்யப்படாத இரத்தத்தை நோயாளிகளுக்கு வழங்கி வந்தது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே, முன்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

அரசின் உத்தரவுக்கு இணங்க சம்பந்தப்பட்ட நிறுவனம் பொலீஸாரினால் மூடப்பட்டது. நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார். (த-எ)

குளத்தின் எருவும் குண்டை எருவும்
தாவரஎருவும் தாதுஎருவென நல்லஉரங்கள் நாலவகையாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று

சந்திரியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு பண்ணிசைப் புகழ் திரு. சி. நடராசா திருப்புகழ் என்னும் விடயம் பற்றி சொற்பொழிவு ஆற்றுவார். (க)

★ ★ ★

ஏழாலை களபாவோடை ஸ்ரீ வசந்த நாசபூசணி அம்மன் ஆலயத்தில் பரதிவெள்ளி ஞாயிறு நினங்களில் மகாபாரத பேருரைகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. த. சிவகுமாரன் இதனை நிகழ்த்திவருகிறார்.

இன்று வெள்ளிக்கிழமை "தர்மம் பிழைத்தது" என்ற பொருளில் பதின்நான்காவது சொற்பொழிவு இடம்பெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 5

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான கணித செயல்முறைச் செயல்மர்வு கோப்பாய் கணித விஞ்ஞான மூலவள நிலையத்தினால் இன்று வெள்ளிக்கிழமை 8.30 மணி முதல் நடத்தப்படஉள்ளது. (இ)

★ ★ ★

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை தாபகர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு பாடசாலை திறந்தவெளியரங்கில் நடைபெற உள்ளது.

அதிபர் திரு. க. செல்வகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (க-152)

★ ★ ★

பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியத்தின் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை ஒன்பதுமணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றாத மாணவர்களை இன்றைய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

★ ★ ★

நல்லூர் ஆலய முன்றலில் இருந்து வருடாந்தம் நுணாவில் சிவபூதவராயர் ஆலயம் வரை நடைபெறும் சிவநாம பாதயாத்திரை இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் பாதயாத்திரை செம்மணி வீதி வழியாகவும் கண்டி வீதி வழியாகவும் செல்லும். பிரஸ்தாப சிவநாம பாதயாத்திரை முப்பதாவது வருடமாக இன்று நடைபெறுகிறது.

இனப்பிரச்சினை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்றும்—ஜனாதிபதி விஜேதுங்கா அண்மையில் வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்குமுகமாகவே திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கா அவருக்கு பகிரங்கக் கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்தப் பகிரங்கக் கடிதத்திலேயே இனப்பிரச்சினை குறித்தும், மாகாணசபை குறித்தும் தனது கருத்தை தெரிவித்திருக்கிறார்.

அதிகாரப்பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்பதே பெரும்பான்மையான மக்களின் அபிலாஷையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினாலும் மாகாணசபைகளினாலும் நாட்டு மக்களுக்குப் பிரயோசனம் எதுவும் இல்லை என்றும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், திருமதி குமாரணதுங்க கூட்டம் ஒன்றில் பேசுகையில் —

வடக்கு – கிழக்கில் அரசினால் நடத்தப்படும் யுத்தம் வெல்லும் என எவரும் எதிர்பார்க்க வேண்டாம் என்று தெரிவித்தார்.

இந்த யுத்தத்தினால் பயன் பெறுபவர்கள் அதனை முடிவுக்குக் கொண்டுவர ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள்.

1978 ஆம் ஆண்டு தமிழர்கள் விடுத்த கோரிக்கைகளை இன்று பதவியில் இருக்கும் அரசாங்கம் நிறைவேற்றி இருந்தால், இந்தப் பிரச்சினை தோன்றியிருக்காது என்றார் அவர்.

கல்லூரியின்...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்படுத்தாது 1989ஆம் ஆண்டு தை மாதம் உயர்தர வகுப்புக்களை அங்குகொண்டு சென்றார்.

மேலும் புதிய கட்டடத் தொகுதியின் ஒரு பகுதியாக எட்டு அறைகள் பூர்த்தியாக்கப்பட்டு பாவனைக்கு வழங்கப்படுவதற்கு விரைந்து செயலாற்றி இக்கைங்கரியத்தில் கட்டட ஒப்பந்தக்காரரின் பூரண ஒத்துழைப்பையும் பெற்றார். கல்லூரி முழுமையாக 89 ஜூனில் பழைய இடத்துக்குத் திரும்பியது.

இந்நிலையில் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அஞ்சல் நினைக்களம் அஞ்சல் முத்திரை ஒன்றை வெளியிட்டுக் கௌரவித்தது. அதிபர் இவ்விழாவினை இங்கும், கொழும்பிலும் கொண்டாடி கல்லூரியின் புகழ் மணம் எங்கும் பரவச் செய்தார்.

கல்லூரியின் சாதனைகள்

நெருக்கடிகள் தொடர்ச்சியாகவிருந்த இக்காலப்பகுதியிலும் கல்லூரி அடைந்த சாதனைகளைக் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது.

★ 1985 உயர் தரப் பரீட்சையில் பௌதிக விஞ்ஞானத்துறையில் அகில இலங்கை ரீதியாக முதல் ஐந்து இடங்களிலும் மூன்று இடங்களை எமது மாணவர் பெற்றனர்.

★ 1986 ஆம், 1987 ஆம் ஆண்டுகளில் முறையே 6ஆம் இடத்தையும், 2ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

★ 87இல் யாழ் மாவட்டத்திலிருந்து பொறியியல் பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களில் கால்பங்கினர் இக்கல்லூரி மாணவர்களே.

★ 87இல் ஜீ. சீ. ஈ. சாதாரண பரீட்சையில் 14 மாணவர்கள் 8 'டி' எடுத்தனர்.

★ 89இல் உயர்தரப் பரீட்சையில் பௌதிக விஞ்ஞானத்துறையில் K. ஆனந்தகுமார் அதி கூடிய புள்ளிகளையும் (366), 91 இல் T. தயாபரன் 3ஆவது அதி கூடிய புள்ளிகளையும் (362) பெற்றார்கள்.

★ இக்காலப் பகுதியில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துக்கும், அவுஸ்திரேலிய பல்கலைக்கழகங்களுக்கும் எட்டு மாணவர்கள் புலமைப் பரிசில் பெற்று வெவ்வேறு கற்கை நெறிகளை பயில்வதற்குச் சென்றனர்.

★ 1990இல் கரப்பந்தாட்டத்தில் இரு பிரிவுகளில் மாவட்டப் போட்டிகளில் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர். மாவட்ட தடகள போட்டிகளில் வடமராட்சிக் கோட்டம் 2ஆம் இடத்தைப் பெற்றது. இதில் ஹாட்லிக்கல்லூரி ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்ததுமன்றி இரு பிரிவுகளில் சாம்பியன்களாகவும் தெரிவு செய்யப்பட்டது.

★ 1985இல் விஞ்ஞானவினாவிடைப் போட்டியில் அகில இலங்கையில் 1ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்ட கல்லூரி, 1992, 1993இல் ரோட்டரிக் கழகம் நடத்திய பொது அறிவுப் போட்டியில் தொடர்ச்சியாக வெற்றிக் கேடயத்தைக் தனதாக்கிக் கொண்டது. ★

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் மேசைப் பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 2 ஆவது ஆண்டு மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக கணிதபீடத் தலைவர் பேராசிரியர் வி. தர்மரத்தினம் இவ்வைபவத்துக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (இ-3)

★ ★ ★

யாழ். மிட்ரவுண் றோட்டறக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இன்று போதும் கழக அணிகள் வருமாறு:-

★ யங்கென்றீஸ் அணி எதிர் சென். நீக்கிலஸ் அணி.

★ சென். மேறிஸ் அணி எதிர் ஞானமுருகன் அணி.

பெரும்பேரரை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாகியுள்ளனர்— என்று விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

பிரச்சினையைப் போர் மூலமாகவே தீர்க்கவேண்டியுள்ளது என விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் யாழ்ப்பாண மக்களுக்கு தெரிவித்துள்ளனர் என்றும் திரு. பாலசிங்கம் மேலும் கூறியதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் தந்தன.

அவசர பொதுக்கூட்டம்

இன்று 05 - 11 - 1993 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அனைத்து சித்தமருத்துவ மாணவர்களுக்குமான பொதுக் கூட்டம் நடைபெற உள்ளதனால் அனைவரையும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

— சித்த மருத்துவ மாணவர் மன்றம்.

[27898]

வடபிராந்திய
வர்த்தகர் சங்கங்களின் சமாஜம்
விடுக்கும்

முக்கிய அறிவித்தல்

வருகின்ற தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு **06-11-1993** சனிக்கிழமையும், **07-11-1993** ஞாயிற்றுக்கிழமையும் வர்த்தக நிலையங்கள் முழுமையாக திறந்து வியாபாரம் செய்யலாம் என அறியத்தருகிறோம்.

நன்றி

(27905) - செயலாளர்

பருத்தித்துறை

ஐக்கிய விளையாட்டுக் கழகம்

33 வது ஆண்டு விழாவும்
விளையாட்டுப் போட்டியும்

இடம்: திக்கமுனை – கழக மைதானம்

காலம்: 06 - 11 - 93 சனி காலை 6 மணியளவில் 10 மைல் மரதன் ஓட்டத்துடன் போட்டிகள் ஆரம்பமாகும்.

சிறப்பு நிகழ்ச்சி: எமது கழக வீரர் வாகனத்தைக் கழுத்தில் கட்டி இழுத்தல்.

07 - 11 - 93 ஞாயிறு பிற்பகல் 2 மணி முதல்

★ இல்ல மெய்வல்லுநர் போட்டி.
★ கயிறு இழுத்தல் (கழகங்களுக்கிடையில்)
★ பெண்களுக்கான சங்கீதக் கதிரை.

சிறப்பு நிகழ்ச்சி: பருத்தி நகர் சாண்டோ எம். துரைரத்தினம் அவர்களால் பயிற்றப்பட்ட எமது கழக வீரர்களின் வீரதீரச் செயல்களும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பருத்தித்துறை ஐ. வி. கழகம்.

(சி/6320)

31ஆம் நாள் நினைவஞ்சலி

05 – 11 – 1993



பிறப்பு: 10 — 12 — 1917

உதிர்வு: 06 — 10 — 1993

அமரர் தம்பு தருமலிங்கம்

(இளைப்பாறிய மின்சார பொறியியலாளர் - [கொழும்பு])

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும், பண்போடும் அரவணைத்து வளர்த்து நல்வழி காட்டி வாழ வைத்த தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து ஒரு மாத காலமானாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது, மறையாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''கணேச வாசா'',
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு. [27896]

இதய பூர்வமான நன்றிகள்

சென்ற 01 – 11 – 1993 திங்கட்கிழமை நடைபெற்ற என் ஆசிரியப் பணியின் வெள்ளிவிழாவின் போது ஆசிகள், அன்பளிப்புகள் வழங்கிய அறிஞர்கள், ஆசிரியர்கள், துர்க்கா தேவஸ்தானத்தினர், அன்பர்கள், நண்பர்கள் எல்லோர்க்கும் என் இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

இவ்வண்ணம்:
திருமதி சா. மாணிக்கவாசகர்.
அதிபர்,
யா/சின்னம்மா வித்தியாசாலை,
சங்காத்தை.

(6581)

6-ம் மாத நினைவஞ்சலி

தோற்றம்: 26 — 06 — 1936
மறைவு: 11 — 06 — 1993

வீரகத்தி கணபதிப்பிள்ளை
(கரவெட்டி)

பெற்றாய், வளர்த்தாய் பேணி வளர்த்திட்டாய்
கற்பித்தாய், கலைகள் பல தெரிய வைத்தாய்
எத்துக்கு எமைப் பிரிந்தாய் ஏங்கி நிற்கும்
சுற்றத்துக்கு என் சொல்லிப் போனாயோ? அப்பா

பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
உறவினர்.

105, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [சி-6524]

20-ம் ஆண்டு நினைவு தினம்



மண்ணுக்கு: 23 — 11 — 1912
விண்ணுக்கு: 05 — 11 — 1974

அமரர்
வித்துவான் க. கார்த்திகேயன்
B. A. (Lond), Dip - in - Ed.

திதி: 05 — 11 — 1993

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை என்றும் வேண்டும்:

குடும்பத்தினர்.

20, குறொசற் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். [சி-6527]

8ஆம் ஆண்டு நினைவுகள்

தோற்றம்: 02 — 06 — 1934
மறைவு: 05 — 11 — 1985

அமரர் தம்பு மாசிலாமணி
(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

ஆண்டுகள் எட்டு காற்றினில் கலந்தன
ஆயினும் நினைவுகள் அப்படியே உள்ளன
மாசிலா முகமும் மாசிலா உளமும்
பாசமாய் எம்மை அணைத்திட்ட குணமும்
வஞ்சனை இலாது நீ வாழ்ந்திட்ட வாழ்வும்
நெஞ்சினை விட்டு நீங்கவே மாட்டா!

— குடும்பத்தினர்.

கோவியம்பாதி,
கொற்றாவத்தை. [27893]

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 28 — 06 — 1905
மறைவு: 26 — 10 — 1991

அமரர் நனகரத்தினம் காசிப்பிள்ளை
(புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசாமி கோவில் தர்மகர்த்தா)

எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக!

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

40, றக்கா றோட்,
யாழ்ப்பாணம். (27906)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறந்த திகதி: 02 - 04 - 1950
✲ ✲ ✲
இறந்த திகதி: 06 - 10 - 1993

அமரர் சுப்பிரமணியம் சிவராஜ்
(கட்டுடை - மானிப்பாய்)

எமது கல்லூரியின் உயர்தர மாணவி செல்வி ராஜினியின் அன்புத் தந்தையாரது 31ஆவது நினைவு நாளில் அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உயர்தர மாணவர் ஒன்றியம்.
யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி,
மானிப்பாய்.

(27900)

மண அறிவித்தல்கள்

திருமதி நாகராசா தெய்வானைப்பிள்ளை

வேலணை கிழக்கைச் சேர்ந்த திருமதி. நாகராசா. தெய்வானைப்பிள்ளை (தங்கம்மா) லண்டனில் 2-11-93 ல் காலமானார். இவர் இளைப்பாறிய அதிபர் இ. நாகராசாவின் அன்பு மனைவியும், மகாதேவா (அவுஸ்திரேலியா), றாணி (லண்டன்), சற்குணசீலன் (கணக்காளர் - அவுஸ்திரேலியா), சற்குணராணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற அக்குரச பிரபல வர்த்தகர் சின்னத்தம்பி - செல்லம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற இளையதம்பி – பாக்கியலட்சுமி தம்பதிகளின் அருமை மருமகளும், இளைப்பாறிய ஆசிரியர்கள் திருமதி. நாகரத்தினம்-பொன்னுத்துரை, செல்வி. சி. சரஸ்வதி ஆகியோரின் அருமைச் சகோதரியும், தேவி, Dr. பத்மநாதன், உஷா பிரியதர்சினி, கணக்காளர் ஜெயவரதன் ஆகியோரின் அன்பு மாமியும், மயூரன், மீனா, தேவகுமாரன், கஜேந்திரகுமாரன், லாவண்யா, ஆரணி, சுஜந்தன், பிரசாந்தன் ஆகியோரின் அன்பு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைனவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்
திருமதி. பொ. நாகரெத்தினம்
செல்வி. சி. சரஸ்வதி
(சகோதரிகள்)

117/4, அரசடி றோட்,
யாழ்ப்பாணம். (27907)

திருமதி சபாரத்தினம் மீனாம்பிகை

தெல்லிப்பழை மேற்கு, கயந்துப்பையை பிறப்பிடமாகக் கொண்டவரும், "ஆனந்தா" 10, சுதுமலைச் சந்தி மானிப்பாயை தற்காலிக வதிவிடமாகக் கொண்டவரும், காலம்சென்ற ப. சின்னத்தம்பி — திருமதி சின்னத்தம்பி தங்கத்தின் அன்புமிக்க மகளும், காலம்சென்ற வேலுப்பிள்ளை சபாரத்தினத்தின் அன்புமிக்க மனைவியும்; திருமதி வேலுப்பிள்ளை செல்வநாயகி, Dr. சி. கதிர்காமத்தையா (கண்டி), Dr. சி. சிவசுப்பிரமணியம் (யாழ்ப்பாணம்), சி. முருகையா (U. K.), சி. சண்முகரத்தினம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிக்க சகோதரியுமாகிய திருமதி சபாரத்தினம் மீனாம்பிகை 2-11-93 இல் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மானிப்பாயில் 2-11-93 மாலை நடைபெற்றன.

தகவல்:
Dr சி. சிவசுப்பிரமணியம்
திரு - திருமதி வேலுப்பிள்ளை

96, 1 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (27904)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டுக்காக [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-11-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கல்வி ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 5

தமிழீழப் பொதுக் கல்வி தேர்வின் விஞ்ஞான செயல் முறைத் தேர்வு நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருப்பதால், சகல தனியார் கல்வி நிலையங்களிலும் 6 ஆம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு வரை கணித, விஞ்ஞான பாடங்களை மட்டும்—

மேற்கூறிய இரு நாட்களிலும் வகுப்புக்களை நடத்தாமல் ஒத்துழைக்குமாறு யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுள்ளது.

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம்
குரும்பசிட்டி, தெல்லிப்பழை

கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவு

குரும்பசிட்டியை பிறப்பிடமாகக் கொண்ட மாணவர்களில் 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்தோர் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானோர்களுக்குச் சன்மானமாக இச்சங்கம் 1990ஆம் ஆண்டிலிருந்து நிதி வழங்கி வருகிறது. தகுதியானோர் பொருளாளர் திரு. வ. கதிர்காமத்தம்பி அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

க. இளையதம்பி, தலைவர்.
து. கலியுகவரதன், செயலாளர்.

[6714]

தமிழீழ காவல்துறை
பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித் தகைமைகள்:- 8ஆம் வகுப்பு தொடக்கம் க. பொ. த (உயர்தரம்) வரை
உயரம் :- 5' - 6"
வயது :- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 04 - 11 - 93 ஆம் திகதி தொடக்கம் 20 - 11 - 93 ஆம் திகதி வரை பழைய பூங்காவிலுள்ள காவல்துறை அலுவலகத்திற்குச் சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை,
தமிழீழம்.

விவசாயிகளே!
தொழிற்சாலை உரிமையாளர்களே!
இயந்திரப் பாவனையாளர்களே!

எங்கள் வளங்களில் எங்கள் கைகளில் பெற்றோலிய எரிபொருள் பிரச்சினைக்கான குறைந்த செலவில் மாற்றீடாக வருகின்றது.

உங்கள்
✲ நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்க
✲ மின் பிறப்பாக்கியை இயக்க

மரக்கரி அல்லது சிரட்டைக்கரி மட்டுமே கொண்டு சக்திமிக்க நாளல்லது தான்



(தமிழீழத்தில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டது)

இரகசியம் ஒன்றும் இல்லை

ஆக்கி வாயுப் பிறப்பாக்கிகள் உங்களின் சக்தித் தேவைகளில் பெருமளவை நிறைவேற்ற வல்லன. இவை சிரட்டை, மர கரிகளிலிருந்து உங்கள் பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் இயந்திரங்களை இயக்க வல்ல ஆக்கி வாயுவை உற்பத்தி செய்கின்றன.

★ உங்கள் இயந்திரத்தில் எதுவித மாற்றமும் செய்யாமலேயே ஆக்கிவாயுப் பிறப்பாக்கிகளை இணைத்து இயக்க முடியும்.

முதற்கட்டமாக ஆல்சிலி (Wolseley) இயந்திரங்களுக்குப் பொருத்திக் கொள்ளலாம்.

பொருத்த வேண்டுமாயின் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

எல்லா நாட்களிலும் காலை 10 மணி முதல் பிற்பகல் 2-30 வரை ஆக்கிவாயுவில் இயந்திரம் இயங்குவதை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்

எமது அலுவலகம்:
சக்திப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
கங்கேசன்துறை வீதி,
தாவடிச் சந்தி, தாவடி.

(சி/6318)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org